**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : திருமதி **V. பார்கவி, B.A.B.L.,L.L.M.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

-------

2022-ம் ஆண்டு மார்ச் மாதம் 14-ம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவராண்டு 2053, பிலவ வருடம் மாசி மாதம் 30-ம்நாள்

------

**அசல் வழக்கு எண். 31/2021 -ல் இடைமனு எண். 02/2021-ல் இடைமனு எண்.03/2021**

1. முசாஹுதீன்
2. பைரோஜ்பானு
3. பிர்தோஷ்கனி ...மனுதாரர்கள்/ புதிய தரப்பினர்கள்/ 2 முதல் 4 பிரதிவாதிகளாக சேர்க்கக் கோரும் நபர்கள்

...எதிர்...

1. மிஸ்பாஹுதீன் ..1-ம் எதிர்மனுதாரர்/வாதி
2. சலாஹுதீன் ..2-ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 11.03.2022 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ்.பி.நெடுஞ்செழியன் அவர்களும், 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு எஸ். சுந்தரய்யா அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரையில் எனது பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளாகவும், இடைமனு எண்.2/2021-ல் 2 முதல் 4 எதிர்மனுதாரர்களாகவும் சேர்க்கக் கோரி இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 1 , விதி 10(2) ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம்

மனுதாரர்கள் அசல் வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளாக சேர்க்கக் கோரும் நபர்கள். தாவா சொத்து மனுதாரர்களின் குடும்பத்தின் பொது வருமானத்தைக் கொண்டு மனுதாரர்களின் தந்தை காலஞ்சென்ற ஒ. முகம்மது அபுபக்கர் என்பவரால் பிரதிவாதி சலாஹுதின் பெயரில் பெயரளவில் வாங்கப்பட்ட பொதுச்சொத்தாகும். மனுதாரர்களின் தந்தை ஒ. முகம்மது அபுபக்கர் கடந்த 1996-ம் ஆண்டு இறந்துவிட்டார். இறந்த ஒ. முகம்மது அபுபக்கருக்கு மனுதாரர்கள் மற்றும் பிரதிவாதி சலாஹுதின் மற்றும் தாஜுதீன் மற்றும் புருஹானுதீன் ஆகியோர் வாரிசுகள். மனுதாரர்களின் தாயார்

தாஜுல்ஹுதா பீவி கடந்த 2016-ம் ஆண்டில் இறந்துவிட்டார். இந்த விவரங்களை மறைத்து தாவா சொத்து பிரதிவாதி சலாஹுதீனின் தனிப்பட்ட சொத்து என்று பிராதில் கூறப்பட்டுள்ளது தவறானது. தாவா சொத்து நாளது வரை மனுதாரர்களின் கூட்டு அனுபவத்தில் உள்ளது. எனவே மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளாவும், இடைமனு எண்.2/2021லும் 2 முதல் 4 எதிர்மனுதாரர்களாகவும் சேர்க்க உத்தரவிடக் கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. 1-ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்

மனு சட்டப்படியும், சங்கதிகளின்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டும். தாவா சொத்து 2-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமாக இருந்து அவர் எழுதிக்கொடுத்த ஹிப்பா உறுதிப் பத்திரத்தின்படி 1-ம் மனுதாரருக்கு கிடைத்து அவர் அனுபவத்தில் உள்ள சொத்தாகும். மேற்படி சொத்து முகமது அபுபக்கர் என்பவரால் 2-ம் எதிர்மனுதாரர் பெயரில் பெயரளவில் வாங்கப்பட்ட பொது சொத்து என்பத தவறானது. தாவா சொத்து 2-ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதியின் தனிப்பட்ட சுய சம்பாத்தியத்தைக்கொண்டு 2-ம் எதிர்மனுதாரர் பெயரில் கிரையம் வாங்கிய சொத்து. அதை எதுவும் செய்ய 2-ம் எதிர்மனுதாரருக்கு உரிமையுண்டு. தாவா சொத்து கூட்டு அனுபவத்தில் உள்ளது என்பது தவறானது. தாவா சொத்தை 1-ம் எதிர்மனுதாரர்/வாதி அனுபவிப்பதை 2-ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதி இடையூறு செய்ததால் நிரந்தர உறுத்துக் கடட்ளை பரிகாரம் கோரி வழக்கு தொடரப்பட்டுள்ளது. எனவே மனுதாரர்கள் உறுத்துக் கட்டளை வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள். உறுத்துக் கட்டளை வழக்கில் இடையூறு செய்யும் நபர்களை மட்டுமே தரப்பினர்களாக சேர்த்தால் போதுமானது. மனுதாரர்கள் வேண்டுமென்றே பொய்யான காரணங்களை கூறி நீதிமன்ற நேரத்தை வீணடிப்பதற்காக இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். எனவே இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4.. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **தீர்வு**

மனுதாரர் தரப்பில் தாவா சொத்து மனுதாரர்களின் குடும்பத்தின் பொது வருமானத்தைக் கொண்டு மனுதாரர்களின் தந்தை காலஞ்சென்ற ஒ. முகம்மது அபுபக்கர் என்பவரால் பிரதிவாதி சலாஹுதின் பெயரில் பெயரளவில் வாங்கப்பட்ட பொதுச்சொத்து என்றும், மனுதாரர்களின் தந்தை

ஒ. முகம்மது அபுபக்கர் கடந்த 1996-ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றும், இறந்த ஒ. முகம்மது அபுபக்கருக்கு மனுதாரர்கள் மற்றும் பிரதிவாதி சலாஹுதின் மற்றும் தாஜுதீன் புருஹானுதீன் ஆகியோர் வாரிசுகள் என்றும், மனுதாரர்களின் தாயார் தாஜுல்ஹுதா பீவி கடந்த 2016-ம் ஆண்டில் இறந்துவிட்டார் என்றும், இந்த விவரங்களை மறைத்து தாவா சொத்து பிரதிவாதி சலாஹுதீனின் தனிப்பட்ட சொத்து என்று பிராதில் கூறப்பட்டுள்ளது தவறானது என்றும், தாவா சொத்து நாளது வரை மனுதாரர்களின் கூட்டு அனுபவத்தில் உள்ளது என்றும், எனவே மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளாவும், இடைமனு எண்.2/2021லும் 2 முதல் 4 எதிர்மனுதாரர்களாகவும் சேர்க்க உத்தரவிடக் கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

7. 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாவா சொத்து 2-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமாக இருந்து அவர் எழுதிக்கொடுத்த ஹிப்பா உறுதிப் பத்திரத்தின்படி 1-ம் மனுதாரருக்கு கிடைத்து அவர் அனுபவத்தில் உள்ள சொத்து என்றும், மேற்படி சொத்து முகமது அபுபக்கர் என்பவரால் 2-ம் எதிர்மனுதாரர் பெயரில் பெயரளவில் வாங்கப்பட்ட பொது சொத்து என்பது தவறானது என்றும், தாவா சொத்து 2-ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் தனிப்பட்ட சுய சம்பாத்தியத்தைக்கொண்டு 2-ம் எதிர்மனுதாரர் பெயரில் கிரையம் வாங்கிய சொத்து என்றும், அதை எதுவும் செய்ய 2-ம் எதிர்மனுதாரருக்கு உரிமையுண்டு என்றும், தாவா சொத்து கூட்டு அனுபவத்தில் உள்ளது என்பது தவறானது என்றும், தாவா சொத்தை 1-ம் எதிர்மனுதாரர்/வாதி அனுபவிப்பதை 2-ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதி இடையூறு செய்ததால் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரர்கள் உறுத்துக் கட்டளை வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர்கள் என்றும், உறுத்துக் கட்டளை வழக்கில் இடையூறு செய்யும் நபர்களை மட்டுமே தரப்பினர்களாக சேர்த்தால் போதுமானது என்றும், மனுதாரர்கள் வேண்டுமென்றே பொய்யான காரணங்களை கூறி நீதிமன்ற நேரத்தை வீணடிப்பதற்காக இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் தரப்பில் தாவாச்சொத்து மனுதாரர்களின் தகப்பனார் முகம்மது அபுபக்கரால் குடும்பத்தின் பொது வருமானத்தைக்கொண்டு 2-ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதி பெயரில் பெயரளவில் கிரையம் வாங்கப்பட்ட சொத்து என்றும், தாவா சொத்து மனுதாரர்களின் கூட்டு அனுபவத்தில் உள்ளது என்றும்,

தாவாச்சொத்து 2-ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்று பிராதில் கூறப்பட்டுள்ளது தவறானது என்றும், எனவே மனுதாரர்கள் இந்த வழக்கிற்கும், தற்காலிக உறுத்துக்கடடளை பரிகாரம் கோரியுள்ள மனுவிற்கும் அவசியமான தரப்பினர்கள் என்றும், எனவே மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளாகவும், இடைமனு எண்.2/2021-ல் 2 முதல் 4 எதிர்மனுதாரர்களாகவும் சேர்க்கக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென இம்மனுவில் கோரப்பட்டுள்ளது. 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாவாச்சொத்து 2-ம் எதிர்மனுதாரரின் சுயசம்பாத்தியததைக்கொண்டு 2-ம் எதிர்மனுதாரரின் பெயரில் கிரையம் வாங்கப்பட்ட சொத்து என்றும், தாவா சொத்து மனுதாரர்களின் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றும், தாவா சொத்து பொதுக்குடும்ப சொத்து இல்லை என்றும் வாதம் செய்யப்பட்டது. இந்த வழக்கில் தீர்வு காண்பதற்கு மனுதாரர்கள் அவசியமான தரப்பினர்கள் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. தாவாச்சொத்து மனுதாரர்கள் கூறுவதுபோல் கூட்டுக்குடும்பச்சொத்தா அல்லது 1-ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கூறுவதுபோல் 2-ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்தா என்பதை அசல் வழக்கில் இம்மனுவின் மனுதாரர்களையும் தரப்பினர்களாக சேர்த்து விசாரணை செய்துபின்னரே தீர்வு காணமுடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்நிலையில் மனுதாரர்கள் கூறுவது போல் தாவாச்சொத்து மனுதாரர்களின் கூட்டு அனுபவத்தில் உள்ளதா அல்லது 1-ம் எதிர்மனுதாரரின் தனிப்பட்ட சொத்தா என்பதை அசல் வழக்கில் தீர்வு காண்பதற்கு மனுதாரர்கள் இந்த வழக்கிற்கும், இடைமனு எண்.2/2021 மனுவிற்கும் அவசியமான தரப்பினர்கள் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரர்களை அசல் வழக்கிலும், இடைமனு எண்.2/2021 மனுவிலும் தரப்பினரர்களாக சேர்த்து அதன்பின்பு அசல் வழக்கில் தீர்வு காண்பதே சரியான தீர்வாக அமையும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. மேலும் மனுதாரர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து வழக்கு நடத்துவதால் ஒரே பொருண்மையின் அடிப்படையில் பல்வேறு வழக்கு நடவடிக்கைகள் ஏற்படுவதை தவிர்க்க உதவும் (Multiplicity of proceedings) என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறு மனுதாரர்களை அசல் வழக்கிலும், இடைமனுவிலும் தரப்பினர்களாக சேர்ப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்நிலையில் இம்மனுவின் மனுதாரர்களை வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளாகவும், இடைமனு எண்.2/2021-ல் 2 முதல் 4 எதிர்மனுதாரர்களாகவும் சேர்க்கக்கோரியுள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவு பிறப்பிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி அதன் பொருட்டு மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள

இம்மனுவை அனுமதித்து உத்தரவு பிறப்பிப்பது என்றும், மனுவின் தன்மை கருதி இம்மனுவின் செலவுத்தொகையை இருதரப்பினரும் அவரவா் செலவுத்தொகையை அவரவா்களே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீா்வு காண்கிறது.

10. முடிவில், இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2022-ம் ஆண்டு மார்ச் மாதம் 14 -ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீா்காழி.

<u>பின் இணைப்பு</u>

<u>மனுதாரா்கள் தரப்பு சாட்சிகள்</u> - இல்லை-

<u>எதிா்மனுதாரா்கள் தரப்பு சாட்சிகள்</u> -இல்லை-

<u>மனுதாரா்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> -இல்லை-

<u>எதிா்மனுதாரா்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> - இல்லை-

மா.உ.நீ

நேரிய/வரைவு உத்தரவு
அசல் வழக்கு எண். 31/2021-ல்
இடைமனு எண். 02/2021-ல்
இடைமனு எண். 03/2021
நாள் -14.03.2022.